**யாழ்ப்பாணம் மாநகர சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலி கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தினை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள்,

பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும்

ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | சபைக்குரித்தான வேலைகள் நிறைவு செய்யப்பட்டிருந்த கிரயப் பெறுமதி கூட்டுமொத்தம் ரூபா 48,756,330 ஆன 09 கட்டடங்கள் நிலையான சொத்துக்களாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி மதிப்பீட்டை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 58 வாகனங்களின் பெறுமதி மற்றும் நன்கொடையாக கிடைக்கப்பட்டிருந்த 7,341 நூலகப் புத்தகங்கள் மற்றும் கூட்டுமொத்தம் ரூபா 1,041,890 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 3,403 நூலகப் புத்தகங்கள் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | -மேற்படி- |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பிரதான பேரேட்டில் காட்டப்பட்டிருந்த நீர்க் கட்டணத்திற்கும் நிதிக் கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருந்த அக் கட்டணத்திற்குமிடையே கூட்டு மொத்தம் ரூபா 647,883 வேறுபாடு காணப்பட்டது. | சீர் செய்யப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | வேறுபாடு சீராக்கப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.7 இணக்கமின்மை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 02 வருடங்களிற்கு மேற்பட்ட மீளளிக்கத்தக்க கேள்வி மற்றும் நானாவித வைப்புக்கள் கூட்டுமொத்தம் ரூபா 6,884,107 சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டு சீர்செய்யப்படும். | நிதிப் பிரமாணத்திற்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 333,243,645 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 272,824,761 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2022 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை | 2021 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2021 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2021 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 83,307,232 | 103,721,112 | 81,043,388 | 163,748,515 | 78,177,486 | 106,880,895 | 84,150,616 | 140,874,328 |
| வாடகை | 363,631,300 | 161,774,184 | 161,752,354 | 21,676,693 | 280,526,898 | 112,475,593 | 105,338,686 | 21,649,863 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 25,842,000 | 29,901,290 | 30,322,058 | 398,000 | 24,332,000 | 25,849,019 | 29,322,712 | 818,767 |
| ஏனைய வருமானம் | 948,781,442 | 331,904,879 | 227,145,922 | 11,377,825 | 849,855,966 | 257,205,492 | 242,725,370 | 6,307,101 |
| | **1,421,561,974** | **627,301,465** | **500.263,722** | **197,201,033** | **1,232,892,350** | **502,410,999** | **461,537,384** | **169,650,059** |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | **வீதவரி** | | |
| | ஒன்டு முதல் 05 வருடங்களிற்கிடையிலான பழைய நிலுவையாக காணப்பட்ட ரூபா 163,748,515 ஆன ஆதனவரி நிலுவையாக விடப்பட்டிருந்தன. | நடுக்கட்டு உத்தியோகத்தர்கள் மூலமாகவும் நடமாடும் சேவையினூடாகவும் சேகரிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நிலுவைகள் அறவிடப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | **வாடகை** | | |
| (i) | நீண்டகால அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 233 எண்ணிக்கையான கடைகள் அதன் உரிமையாளர் அல்லாத வேறு ஆட்களால் நடாத்தப்பட்டு வருகின்றது. | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | குறித்த உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் நடவடிக்கைகள் தாமதமின்றி எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | குருநகர் சந்தைக்கடை தொகுதியில் அமைந்துள்ள 41 கடைகள் 2016 ஆம் ஆண்டிலிருந்து 06 ஆண்டுகளாக குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்காமையினால் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | 2016 ஆம் ஆண்டு பத்திரிகையில் கேள்வி கோரப்பட்டு ஒருவராலும் குத்தகைக்கு எடுக்கப்படவில்லை. கடை நடாத்த பொருத்தமான வசதிகள் காணப்படாமையால் கடைகளை வழங்கமுடியாது உள்ளது. | தேவையான வசதிகளை பூரணப்படுத்தப்பட்டு தாமதமின்றி கேள்வி கோரப்பட வேண்டும். |
| (iii) | 05 வருடங்கள் அல்லது 03 வருடங்களிற்கு ஒருமுறை மீள புதுப்பிக்கப்பட வேண்டியிருந்த 122 கடைகளுக்குரிய நீண்டகால குத்தகை உடன்படிக்கைகள் மீள புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மீள புதுப்பிக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | உடன்படிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| சபைக்குரித்தான 17 கடையறைகள், பல்பொருள் வாணிபம் மற்றும் 02 விளம்பர ஒலிபரப்புச் சேவைகள் மீளாய்வாண்டில் கேள்விகோரி வழங்கப்பட்டிருக்காமையினால் கூட்டுமொத்தம் ரூபா 12,245,171 சபைக்கு வருமான இழப்பேற்பட்டிருந்தது. | வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு எவரும் முன்வரவில்லை. | குறித்த நோக்கங்களிற்கு உபயோகப்படுத்தப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்த கடந்த 05 தொடக்கம் 27 ஆண்டுகள் பழைய முற்பணம் கூட்டுமொத்தம் ரூபா 6,983,066 இதுவரை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்பனவு செய்யப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்க தாமதமின்றி நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | 01 தொடக்கம் 10 வருடங்களாக பயன்படுத்தப்படாது காணப்பட்டிருந்த 53 வாகனங்கள் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு பயன்படுத்தவோ அல்லது நீக்குவதற்கோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவற்றினை பரீசீலிப்பதற்கு மாகாண இயந்திர பொறியியலாளருக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் பயன்பாடின்றி வைக்கப்படாதிருத்தல் வேண்டும். |
| (ஆ) | 2015 சனவரி 01 ஆம் திகதியிடப்பட்ட நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2015 இற்கமைவாக அழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த 19 வாகனங்கள், கடந்த 02 தொடக்கம் 04 ஆண்டுகளாக தொடற்ந்தும் வைக்கப்பட்டிருந்தது. | ஒரு மாத காலத்தினுள் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைக்கு அமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | சபைக்கு நன்கொடையாக கிடைக்கப்பெற்றிருந்த 25 வாகனங்கள் நாளதுவரை சபைக்குரித்தற்ற நிலையில் பயன்படுத்தப்பட்டிருந்தன. | உடமையாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | சபைக்குரித்தாக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | 2015 திசெம்பர் 30 ஆம் திகதிய 2016/01 ஆம் இலக்க நிதி | -மேற்படி- | சொத்துக்களின் உரிமையினை தாமதமின்றி |

| | | | |
|---|---|---|---|
| | ஆணைக்குழு சுற்றறிக்கையின் 1.1 ஆம் பந்தி இற்கு முரணாக சபைக் குறித்தற்றிருந்த 45 காணிகளில் மீளாய்வாண்டில் கூட்டுமொத்தம் ரூபா 36,604,935 கிரயத்தில் சந்தை மற்றும் கலாச்சார மண்டபங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. | | தீர்க்கப்படுதல் வேண்டும். |
| (உ) | சபையின் நவீன சந்தையின் மேற்றளத்தில் 2017 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 02 மண்டபங்கள் நாளதுவரை பயன் படுத்தப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கேள்வி கோரப்பட்டிருந்தும் வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்கு எவரும் முன்வரவில்லை. | குறித்த நோக்கத்திற்கு உபயோகப்படுத்தப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | அனுமதிக்கப்பட்ட ஆளணியினரிற்கு மேலதிகமாக 2014 ஆம் ஆண்டு 10 சுகாதார தொழிலாளிகள் மற்றும் 08 பெண் பரிசாரர்கள் சபையினால் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அத்தகைய ஆளணியினர் முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் கடந்த 08 ஆண்டுகளாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 பெப்ரவரி 16 ஆம் திகதியன்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | சட்டங்கள், விதிகளுக்கமைய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும |
| (ஆ) | ஓய்வு பெற்ற, இறந்த மற்றும் பணிநீக்கம் செய்யப்பட்டிருந்த 154 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பதவியினர் கடன் நிலுவை கூட்டுமொத்தம் ரூபா 1,438,147 கடந்த 01 தொடக்கம் 05 ஆண்டுகளாக அறவிடப்பட்டிருக்க தாபனவிதிக் கோவையின் அத்தியாயம் XXIV இன் பிரகாரம் சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடன் நிலுவை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

4. **கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**
**சுற்றாடல் பிரச்சனைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| திண்மக்கழிவுகளை அகற்றுவதற்குரிய இடத்திற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரமும் சபையினால் தயாரிக்கப்படுகின்ற உரத்திற்குரிய தரச்சான்றிதழும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்காமையினால் பசளை தயாரிப்பு இயந்திரமானது கடந்த 06 மாதங்களாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இவ் விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் மற்றும் தரச்சான்றிதழினை பெற்றுக்கொள்வதுடன் குறித்த இயந்திரத்தினை திருத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |